**செய்தி வெளியீடு எண்: 468** **நாள்: 04.08.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.8.2019) சேலம், மாநகராட்சி மைதானம், அண்ணா கலையரங்கத்தில் நடைபெற்ற சேலம் அரசுப் பொருட்காட்சி – 2019யை தொடங்கி வைத்து ஆற்றிய விழாப் பேருரை.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த சிறப்பான பொருட்காட்சிக்கு வருகை புரிந்துள்ள அத்தனைபேருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றத்தைத் தந்திட்ட தமிழக மக்களுக்கு ஏற்றத்தைத் தரும் வகையில் சீரிய முறையில் திட்டங்களைத் தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்துவது தான் உண்மையான மக்கள் நலன் நாடும் அரசின் கடமையாகும் என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழகம் வளம் பெறுவதையும், தமிழக மக்கள் நலம் பெறுவதையும் தனது ஒரே குறிக்கோளாகக் கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல நலத் திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் தமிழ்நாட்டில் அமல்படுத்தி சாதனை படைத்தார்கள். அம்மா அவர்கள் வழியில் செயல்படும் எங்களுடைய அரசும், மக்கள் நலத் திட்டங்களையும் வளர்ச்சிப் பணிகளையும் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. அரசு செயல்படுத்தும் திட்டங்களைப் பற்றி மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் அத்திட்டங்கள் பற்றிய விளக்கங்களை மக்களிடம் எடுத்துச் சொல்லும் பணியை செய்யும் துறை தான் செய்தி மக்கள் தொடர்புத் துறை. அதாவது, செய்தி மக்கள் தொடர்புத் துறை அரசுக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசின் திட்டங்களை அரசுத் துறையின் சார்பில் நிறைவேற்றும் பணிகளை மக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் ஒவ்வொரு துறையின் சார்பிலும் அரங்குகள் அமைக்கப்பட்டு, அரசின் சாதனைகளை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பது தான் அரசு பொருட்காட்சியினுடைய நோக்கமாகும். இந்தப் பொருட்காட்சியில் ஆண்டுதோறும் அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும் முக்கிய விழா நாட்களில்

அதிகளவில் மக்கள் பங்கு பெறும் வகையில் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் மக்கள் பெருமளவில் அரசுத் திட்டங்களை அறிந்துகொள்ள வழிவகை செய்யப்படுகின்றது. அரசு என்னென்ன திட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்றது என்பதை பொருட்காட்சியில் இடம்பெற்றுள்ள அந்தந்தத் துறை அரங்கத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். பொருட்காட்சியில் உள்ள அரசுத் துறையின் அரங்குகளை நீங்கள் சென்று பார்த்தால் அம்மா காலத்திலிருந்து, அம்மாவின் அரசு எவ்வளவு திட்டங்களைத் தந்திருக்கின்றது என்பதை தத்ரூபமாகப் பார்த்துத் தெரிந்து கொள்வதற்கு இந்த பொருட்காட்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பாரதரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களது ஆட்சிக் காலத்தில் தான் முதன்முதலாக அரசு பொருட்காட்சி 6.8.1978 அன்று சேலத்தில் நடத்த ஆணையிடப்பட்டு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது என்பது பெருமைக்குரியதாகும். ஆகவே, வாழும் தெய்வமாக வாழ்ந்து மறைந்த பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் திருக்கரங்களால் திறக்கப்பட்ட பொருட்காட்சியை, அவருடைய தொண்டனாக இருந்து, வளர்ந்து, முதலமைச்சராகி, இன்றைய தினம் திறந்து வைப்பதற்கு, நம்முடைய சேலம் மாவட்டத்தில் பிறந்த எனக்குக் கிடைத்த வாய்ப்பை நான் பெருமையாகக் கருதுவதுடன் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை ஆற்றியுள்ள சிறப்புப் பணிகளில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். இதுவரை சேலத்தில் 36 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 1978–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் இதுவரை மொத்தம் 204 அரசுப் பொருட்காட்சிகள் தமிழ்நாடு முழுவதும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. 205–வது அரசுப் பொருட்காட்சி 22.6.2019 அன்று திருநெல்வேலியிலும், 206–வது அரசுப் பொருட்காட்சி 29.6.2019 அன்று காஞ்சிபுரத்திலும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இதுவரை நடைபெற்று நிறைவடைந்த 204 அரசுப் பொருட்காட்சிகளின் வாயிலாக அரசிற்கு ரூபாய் 39 கோடியே 1 இலட்சத்து 18 ஆயிரம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. அரசுப் பொருட்காட்சியில் முன்னர் 15 அரசுத் துறைகள் தான் பங்கேற்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா மேலும் 12 அரசுத் துறைகள் பங்கு பெற

ஆணையிட்டதின் விளைவாக தற்போது 27 அரசுத் துறைகள் இன்றைக்கு அரசுப் பொருட்காட்சியில் அரங்குகள் அமைக்கப்பட்டு பங்கேற்றுள்ள என்பதை பெருமகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

மேலும் தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு கிராமக் கைத்தொழில் வாரியம், கோ–ஆப்டெக்ஸ், ஆவின், தாட்கோ, சேலம் மாநகராட்சி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு உப்பு நிறுவனம் போன்ற அரசு சார்பு நிறுவனங்களும் அரசுப் பொருட்காட்சியில் அரங்குகள் அமைத்து பங்கேற்றுள்ளன. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 10 அரசு பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. அரசுக்கு வருவாய் ஈட்டுகின்ற வகையிலும், அனைத்து மாவட்டப் பொதுமக்களும் பயன்பெறுகின்ற வகையிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய 6 மாவட்டத் தலைநகரங்களில் ஒவ்வொரு ஆண்டும் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வந்தது. மேலும், ஏனைய மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில் ஆண்டுதோறும் சுழற்சி முறையில் 4 மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சி நடத்தப்படுகின்றன.

2019–ஆம் ஆண்டு புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில் தமிழ்நாடு அரசின் சார்பில் மகாத்மா காந்தி மதுரையில் 1921–ஆம் ஆண்டு அரையாடை மட்டுமே அணிவது என்ற முடிவினை விளக்கும் வகையில் அலங்கார ஊர்தி வடிவமைக்கப்பட்டது. மேலும், ஊர்தியுடன் இணைந்து வந்த செய்தி மக்கள் தொடர்புத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட கரகாட்டக் கலை நிகழ்ச்சிக் குழு அனைவரின் பாராட்டைப் பெற்று அகில இந்திய அளவில் முதல் பரிசு பெற்று தமிழகத்திற்கு பெருமையைச் சேர்த்தது.

தமிழ்நாடு அரசு சார்பில் புதுடெல்லியில் நடைபெறும் அகில இந்திய பன்னாட்டு வர்த்தக பொருட்காட்சியில் இத்துறை ஆண்டுதோறும் பங்கேற்று தமிழக அரசின் அனைத்துத் துறைகள் தொடர்பான கொள்கை விளக்கங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகளை அனைத்து மாநில அரசுகளும், மக்களும் அறிந்துகொள்ளும் வகையில் விளக்கப் புகைப்படங்கள் மற்றும் காட்சிப் பொருட்கள் வாயிலாக வெளிக்கொணரப்பட்டு

வருகிறது. புதுடெல்லியில் 2018–ஆம் ஆண்டு பங்கு பெற்றதில் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைக்கப்பட்ட அரங்கிற்கு சிறந்த அரங்கு என்ற சான்று வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமையோடு குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்திய துணைக்கண்டத்தின் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் புதுடெல்லியில் ஆண்டு தோறும் நடைபெறும் மலர்ப் பேரணி விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடந்து பங்கேற்று வருகிறது. 2012, 2013, 2014, 2015, 2016, 2017 மற்றும் 2018–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற மலர்ப் பேரணி விழாக்களில் தமிழ்நாடு அரசு பங்கேற்று தொடர்ந்து முதல் பரிசு பெற்று வருகிறது என்பதை பெருமையோடு குறிப்பிட விரும்புகின்றேன்.

மக்களுக்கான நலப் பணிகள் விரைவாகவும், உரிய முறையிலும் சென்றடைத்து உதவிப் பணியாளர்கள் கொண்டு செயல்படுவதன் விளைவாக பல்வேறு திட்டங்கள் ஒப்புதல் வழங்கப்பட்டு அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் வீட்டுவசதி திட்டங்கள், வேளாண் பெருமக்களுக்கான திட்டங்கள், ஏழை மக்கள் உயர்தர சிகிச்சை பெற சுகாதார திட்டங்கள், மக்கள் போக்குவரத்தை எளிதாக்க சாலை வசதிகள், உரிய பேருந்துகள், நெசவாளர் முன்னேற்றத்திற்கான பல திட்டங்கள் என பல்வேறு திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிகழ்ச்சியின் வாயிலாக முடிவுற்ற பணிகளை இங்கே நான் திறந்து வைத்திருக்கின்றேன். அதில் சிலவற்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்** மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 85 இலட்சத்து 95 ஆயிரம் மதிப்பீட்டில் முடிவுற்ற 8 திட்டப்பணிகளை உங்கள் முன் நான் திறந்து வைத்திருக்கிறேன்.

**பள்ளிக் கல்வித்துறையின் சார்பில்** நபார்டு திட்டத்தின் கீழ் ஜலகண்டாபுரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 2 கோடியே 28 இலட்சத்து 12 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 வகுப்பறைகள், 1 அறிவியல் ஆய்வுக்கூடம், 3 கழிவறைகள் மற்றும் குடிநீர் வசதியுடன் கூடிய பள்ளிக் கட்டடமும்,

ஓமலூர், கே.மோரூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 1 கோடியே 89 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் 8 வகுப்பறைகள், 1 அறிவியல் ஆய்வுக்கூடம், 2 கழிவறைகள், குடிநீர் வசதி மற்றும் சுற்றுச்சுவருடன் கூடிய பள்ளிக் கட்டடமும்,

பெத்தநாயக்கன்பாளையம், பெரிய கிருஷ்ணாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் ரூபாய் 1 கோடியே 8 இலட்சத்து 33 ஆயிரம் மதிப்பீட்டில் 4 வகுப்பறைகள், 1 அறிவியல் ஆய்வகம், 2 கழிவறைகள், குடிநீர் வசதி மற்றும் சுற்றுச்சுவருடன் கூடிய பள்ளிக் கட்டடமும்,

**என மொத்தம் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் 3 பள்ளிகளில் ரூபாய் 5 கோடியே 25 இலட்சத்து 95 ஆயிரம் மதிப்பீட்டில் முடிவுற்ற 3 திட்டப் பணிகளை உங்கள் ஆசியோடு திறந்து வைத்திருக்கின்றேன்.**

வனத்துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 3 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டில் பெத்தநாயக்கன்பாளையம், நெய்யமலை அடிவாரம் பேருந்து நிறுத்தம் முதல் நெய்யமலை கிராமம் வரை சுமார் 4 கி.மீ நீளம் அமைக்கப்பட்டுள்ள தார் சாலையும்,

நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறையின் மேட்டூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூபாய் 2 கோடியே 2 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 3 நுண் உரக் கூடங்களும்,

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் கருமந்துறை, மணியார்குந்தம் மற்றும் தாழ்வள்ளம் ஆகிய 3 துணை சுகாதார நிலையங்களுக்கு தலா ரூபாய் 30 இலட்சம் வீதம் ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்களும்,

கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் பெத்தநாயக்கன் பாளையம் மேற்கு ராஜபாளையத்தில் ரூபாய் 31 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கால்நடை மருந்தக கட்டடமும்,

**ஆக மொத்தம் ரூபாய் 13 கோடியே 40 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 19 முடிவுற்ற திட்டப் பணிகள் இன்றைய தினம் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக நான் திறந்து வைத்ததில் மகிழ்ச்சி அடைகின்றேன்.**

இந்த நிகழ்ச்சியின் வாயிலாக பல்வேறு துறைகளின் சார்பாக நலத்திட்ட உதவிகளை வழங்கி இருக்கின்றோம்.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில்** முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டம் மற்றும் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 500 பயனாளிகளுக்கு ரூபாய் 9 கோடியே 42 இலட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான மானிய நிதி உதவியும்,

**பள்ளி கல்வித் துறையின் சார்பில்** புதிய பாடத்திட்டத்தின்படி, தொழில்நுட்பத்துடன் கூடிய, பாடப் புத்தகத்தில் உள்ள QR-CODE-ஐ பயன்படுத்தி சிறப்பாக கற்பிக்கும் வகையில்

சேலம் மாவட்டத்தில் உள்ள 154 அரசு பள்ளிகளில் 11 மற்றும் 12–ஆம் வகுப்பு கற்பிக்கும் 1,359 ஆசிரியர்களின் பயன்பாட்டிற்கு ரூபாய் 1 கோடியே 66 இலட்சம் மதிப்பிலான 1,359 விலையில்லா மடிக்கணினிகளும்,

**வனத்துறையின் சார்பில்** தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்ட வனக்குழு நிதியிலிருந்து 24 பயனாளிகளுக்கு ரூபாய் 3 இலட்சத்து 90 ஆயிரம் சிறுதொழில் தொடங்குவதற்கான கடனுதவிகளும்,

**கூட்டுறவுத்துறையின் சார்பில்** 263 நபர்களுக்கு பயிர் கடனும், 62 நபர்களுக்கு மத்திய கால கடனும், 322 நபர்களைக் கொண்ட 26 சுய உதவி குழுக்களுக்கு கடனுதவியும், 45 நபர்களைக் கொண்ட 7 குழுக்களுக்கு கூட்டுப்பொறுப்புக் குழு கடனுதவியும்,

**என மொத்தம் 692 நபர்களுக்கு ரூபாய் 3 கோடியே 47 இலட்சத்து 76 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு கடன் உதவிகள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்பட உள்ளன.**

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் சார்பில் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு** சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 4,050 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 47 இலட்சத்து 55 ஆயிரம் மதிப்பிலான கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு நிதியுதவி, மகப்பேறு நிதியுதவி, விபத்து ஊனம் மற்றும் மரணத்திற்கான நிதியுதவி, ஈமச்சடங்கு நிதியுதவி மற்றும் கண்கண்ணாடி நிதியுதவி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும்,

**மகளிர் திட்டம் சார்பில்** 3,948 நபர்களைக் கொண்ட 329 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 32 இலட்சத்து 90 ஆயிரம் சுழல்நிதியும், உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 200 மகளிர்களுக்கு ரூபாய் 50 இலட்சம் அம்மா இருசக்கர வாகன மானியமும்,

**வருவாய்த்துறையின் சார்பில்** 140 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகையும்,
5 நபர்களுக்கு உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முதியோர் உதவித் தொகையும்,
16 நபர்களுக்கு விதவை உதவித் தொகையும்,
10 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகையும்,
192 நபர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களும்,

**என மொத்தம் 343 பயனாளிகளுக்கு ரூபாய் 27 இலட்சத்து 55 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளும்,**

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 45 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் 12 இலட்சத்து 71 ஆயிரம் மதிப்பிலான திருமண நிதி உதவி மற்றும் மாதாந்திர உதவித்தொகைகளும்,

ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் 9 பயனாளிகளுக்கு ரூபாய் 84 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களும்,

நல்லிணக்கத்துடன் வாழும் சிறந்த ஊராட்சிகளுக்கு பரிசுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், அம்மாபாளையம் ஊராட்சிக்கு ரூபாய் 10 இலட்சம் பரிசுத் தொகையும்,

**பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில்** 20 பயனாளிகளுக்கு ரூபாய் 10 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான பட்டுப்புழு வளர்ப்பு தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்களும்,

**தோட்டக்கலைத் துறையின் சார்பில்** 50 பயனாளிகளுக்கு ரூபாய் 26 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பிலான நுண்நீர் பாசன மானியம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும்,

**வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில்** வனவாசி வள்ளலார் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு ரூபாய் 10 இலட்சம் மதிப்பு கூட்டும் இயந்திரங்களுக்கான மானியத் தொகையும்,

**வேளாண்மைத் துறையின் சார்பில் 51** விவசாயிகளுக்கு ரூபாய் **6** இலட்சத்து **32** ஆயிரம் மதிப்பிலான தெளிப்பு நீர் பாசனம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும்,

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில்** ரூபாய் **1** இலட்சத்து **47** ஆயிரம் மதிப்பீட்டில் **20** பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்கள் மற்றும் விலையில்லா சலவைப் பெட்டிகளும்,

**உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின்** சார்பில் **238** நபர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளும்,

**ஆக மொத்தம் இன்றைய தினம் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக 11,571 பயனாளிகளுக்கு ரூபாய் 17 கோடியே 96 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன.**

ஏன் இத்தனையும் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் எல்லாம் இந்த ஆட்சியில் ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்கிறார்கள். இந்த நிகழ்ச்சியின் வாயிலாக இன்றைக்கு மட்டும் 11,571 நபர்கள் பயன் பெறுகிறார்கள். இந்த மாவட்டத்தில் மட்டும். ஆகவே, நான் சொன்ன திட்டங்கள் அனைத்தும், அனைத்து தரப்பு மக்களுக்கும் நலத் திட்ட உதவிகளை வழங்கும் விழாவாக இந்த அரசு பொருட்காட்சியிலே இடம் பெற்றிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே நான் தெரிவிக்கிறேன். இத்தனையும் பத்திரிகையின் வாயிலாக வெளிப்படுத்த வேண்டும்.

ஏன் என்றால் எதிர்க்கட்சி இந்த ஆட்சியிலே ஒன்றுமே நடக்கவில்லை என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். இவ்வளவும், நடக்கிறது, நடக்கிறது என்று உங்கள் முன் பகிரங்கமாக அறிவிக்கிறேன்.

அதுமட்டுமல்ல இன்னும் செய்யப் போகின்ற திட்டங்களை உங்கள் முன் சொல்லியாக வேண்டும்.

திருமேனிமுத்தாற்றின் சுத்திகரிப்பு திட்டம். நம்முடைய சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற இன்றைக்கு கழிவு நீர் எல்லாம் வெளியேறி திருமேனிமுத்தாற்றில் போய் கலக்கிறது. அந்த திருமேனிமுத்தாறு என்பது வெளியில் சென்று நாமக்கல் மாவட்டம் வரைக்கும் பல ஏரிகளில் போய் நிரம்புகிறது. இதனால் அந்த நீர் எல்லாம் மாசுப்படுகிறது. இதை களைவதற்காக அம்மாவுடைய அரசு சேலம் மாநகராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக அணைமேடு, வெள்ளக்குட்டை, மான்குட்டை மற்றும் வண்டிப்பேட்டை ஆகிய இடங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, பாதாள சாக்கடை திட்டங்களில் ஒன்றாக சேர்ந்து 263 கோடி ரூபாயில் இந்தப் பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக இனி சேலம் மாநகரத்திலிருந்து வெளியேறும் நீர் அனைத்தும் சுத்திகரித்து திருமேனிமுத்தாற்றில் விடப்படும் என்ற செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவிக்கிறேன்.

அதேபோல, நம்முடைய சேலம் மாவட்ட விவசாய பெருங்குடி மக்கள் பலமுறை சந்தித்து என்னிடத்திலே கோரிக்கை மனுவினை அளித்தார்கள். அதேபோல நம்முடைய மாவட்டத்திலே இருக்கின்ற சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய திரு.செம்மலை அவர்கள், திரு.வெற்றிவேல் அவர்கள், திரு.ராஜா அவர்கள், என்னுடைய தொகுதி, இந்த நான்கு சட்டமன்ற தொகுதியிலே இருக்கின்ற விவசாய மக்கள் எல்லாம் பயன்பெறுகின்ற விதமாக இன்றைக்கு மேட்டூர்அணை நிரம்பி உபரியாக வெளியேறுகின்ற போது அந்த காலக்கட்டத்திலே Lift Irrigation நீர் ஏற்றி மூலமாக 565 கோடி ரூபாயிலே 100 ஏரிகள் நிரப்பப்படும். அந்த அறிவிப்பும் கொடுக்கப்பட்டு அந்தப் பணியும் விரைவாக முடிக்கப்படும். ரூபாய் 565 கோடியில் நிறைவேற்றுகின்ற அந்த பணிகளில் 100 ஏரிகள் நிரப்பப்படுகின்றபொழுது நிலத்தடி நீர் உயர்ந்து, விவசாயத்திற்குத் தேவையான நீர் கிடைப்பதற்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

காவிரி–கோதாவரி இணைப்புத் திட்டத்தை நிறுவேற்றுவதற்கு எங்களுடைய அரசால் கடும் முயற்சி எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மத்திய அரசால் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக தமிழ்நாட்டின் டெல்டா பாசன விவசாயிகளுக்கு 125 டி.எம்.சி தண்ணீர் கிடைப்பதற்கு வழிவகை செய்கின்ற அரசு எங்களுடைய அரசு.

கங்கை நதியில் கலக்கின்ற மாசு நீரை தவிர்ப்பதற்காக கங்கையை புனிதப்படுத்தும் திட்டத்தை மத்திய அரசு அறிவித்ததைப் போன்ற திட்டத்தை, நம்முடைய காவிரி ஜீவ நதியில் பல்வேறு நதிகளிலிருந்து வெளியேறுகின்ற மாசடைந்த நீர் கலப்பதை தவிர்த்து, காவிரி நீரையும் புனிதப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு பிரதமர் அவர்களை நான் சந்தித்தபொழுது வைத்தேன். அவரும் அதனை ஏற்று, அண்மையில் நடைபெற்ற மேதகு குடியரசுத் தலைவர் உரையிலே காவிரி நதிநீர் மாசுபடுவதை தவிர்ப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற செய்தியை தெரிவித்திருக்கின்றார்கள். அதற்கு தமிழ்நாட்டின் மக்களின் சார்பாக நன்றியை நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசின் சார்பாக, காவிரி நதி நீர் மட்டுமல்ல, பவானி, அமராவதி, வைகை, தாமிரபரணி ஆற்றின் நீர் மாசுபடுவதை சுத்திகரிப்பதற்கான திட்டத்தை அம்மாவினுடைய அரசு அமல்படுத்தவிருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன், இது மிகப் பெரிய சாதனை.

பருவமழை பொய்த்து, நிலத்தடி நீர் வற்றிவிட்ட காரணத்தினால், நிலத்தடி நீரை உயர்த்த, பருவ காலங்களில் பொழிகின்ற மழை நீர் முழுவதையும் சேமித்து வைக்க வேண்டுமென்பதற்காக அம்மா அரசு நீண்டகால நெடிய திட்டமான குடிமராமத்து திட்டம் மூலமாக தமிழ்நாட்டில், பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏரிகள் தூர்வாருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக 2016–17–ஆம் ஆண்டு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 1519 ஏரிகள் ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் துவக்கினோம். இதற்கு பொதுமக்கள், விவசாயிகளிடத்திலிருந்து நல்ல வரவேற்பு கிடைத்த காரணத்தினால் இதனை விரிவிபடுத்த 2017–2018–ஆம் ஆண்டு 1511 ஏரிகள் ரூபாய் 328 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு

பணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், 2018–19–ஆம் 1829 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு ரூபாய் 500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஏரிகளை தூர்வாருவதற்கு அம்மாவின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு முதற்கட்டமாக 7.8.2019 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் நீர்வள ஆதார பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் மஞ்சாங்காரணி ஊராட்சியில், ஊரம்பாக்கம் கிராமத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் உள்ள சிறு பாசன ஏரி, மணப்பாக்கம் என்ற இடத்தில் உள்ள பொதுப்பணித் துறைக்கு சொந்தமான ஏரி ஆகிய ஏரிகளில் தூர்வாரும் பணியை நான் துவக்கி வைக்கவுள்ளேன்.

ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் சட்டம் பயில முடியாத நிலை உள்ளதை கருத்தில் கொண்டு, கடந்த முறை 3 சட்டக் கல்லூரிகளை உருவாக்கித் தந்த பெருமை அம்மா அவர்களைச் சாரும். மேலும், தொடர்ச்சியான இந்த ஆண்டு 3 சட்டக் கல்லூரிகளை அம்மா அரசு வழங்கியுள்ளது. அதில் ஒன்று சேலம் மாவட்ட சட்டக் கல்லூரி.

தமிழ்நாட்டில் முதன்முதலாக சேலம் மாவட்டத்தில் Bus Port அமைக்க மத்திய அரசு அனுமதித்து, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் முதல் பாலம் ஏ.வி.ஆர் ரவுண்டானாவிலிருந்து அஸ்தம்பட்டி செல்லும் வரையிலான மேம்பாலம் என்னால் அண்மையில் துவக்கி வைக்கப்பட்டு, அந்தப் பணிகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சேலம் மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசல் உள்ள அனைத்துப் பகுதிகளிலும், இரயில்வே கடவுகளின் குறுக்கிலும் பாலம் கட்டுகின்ற அரசு எங்களுடைய அரசு.

சேலம் மாவட்டம் மட்டுமன்றி, தமிழ்நாடு முழுவதும், குடிநீர் பிரச்சினை இருக்கக்கூடிய இடங்களுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தண்ணீர் வழங்குகின்ற அரசு எங்களுடைய அரசு.

தேசத்திற்காக பாடுபட்ட தேச பக்தர்கள் புகழ் சிறக்க அதிகமாக மணிமண்டபங்கள் கட்டியதும், சிலை வைத்ததும் அம்மாவினுடைய அரசு தான். எந்த ஆட்சியிலும் இதுபோல கிடையாது.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற போது, தேசத்திற்காக பாடுபட்ட, தேசத்திற்காக உழைத்த சுதந்திரம் பெற்று தந்த அந்த நல்ல உள்ளங்களுக்கு

மரியாதை கொடுக்கின்ற விதத்திலே அவர்களுக்கு புகழ் சேர்க்கின்ற விதத்திலே, மணிமண்டபங்களையும், சிலைகளையும் அமைத்தார்கள். அதேபோல, எங்களுடைய அரசும், அம்மா வழியில் நின்று அதிகமான தேச பக்தர்களுக்கு, நாட்டிற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட உயிர்நீத்த தியாக செம்மல்களுக்கு சிலைகள் வைத்து மணிமண்டபங்களை அமைத்ததும் எங்களுடைய அரசு தான். வேறு எந்த அரசாங்கத்திலும், இவ்வளவு சிலைகளை அமைக்கவில்லை. தேச பக்தர்களுக்கு இவ்வளவு மணிமண்டபங்களையும் கட்டவில்லை.

அதேபோல, நீண்டநாள் என்னுடைய ஆசை, சேலம் மாவட்டத்திலே பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலை, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய சிலை, இரண்டையும் நிறுவ வேண்டும் என்று எண்ணினேன். அதையும் உங்களுடைய ஆசியோடு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய அருளாசியோடு நான் கண்ட கனவை உங்கள் அனைவரோடு, இங்கே இருக்கின்ற, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் துணையோடு, அற்புதமாக இரண்டு வெண்கலச் சிலைகளை அமைத்து பெருமை சேர்த்திருக்கின்றேன். அதுவே, நான் வாழ்நாளில் பெற்ற மகிழ்ச்சியாக கருதுகின்றேன்.

அதேபோல, சில பத்திரிகையிலே செய்தி வந்திருக்கின்றது. ஒரு ஆங்கில நாளேட்டிலும், தினகரன் நாளேட்டிலும் அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி செலவழிக்க வில்லை என்று ஒரு தவறான கருத்தை பதிவு செய்திருக்கிறார்கள். அதற்கு நான் விளக்கம் அளிக்க விரும்புகின்றேன்.

**2017–18**ஆ ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் மாநில நிதி நிலை மீதான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மத்திய அரசின் திட்டங்களுக்கான நிதி பயன்பாடு குறித்து பத்திரிகையில் வெளிவந்த செய்திகள் குறித்து விளக்கம் அளிக்கின்றேன்.

ஏன் என்றால் ஒரு தவறான செய்தியை இன்றைக்கு பத்திரிகையின் வாயிலாக வந்திருக்கின்றது. அரசிற்கு அவப்பெயர் ஏற்படுத்துகின்ற விதமாக இருக்கின்ற

காரணத்தினாலே இதை தெளிவுப்படுத்துவது அரசினுடைய கடமை என்ற காரணத்தினாலே இதை தெளிவுப்படுத்த விரும்புகின்றேன்.

**சில பத்திரிகைகளில், 2017–18ஆம் ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் மாநில நிதிநிலை மீதான அறிக்கையில் தமிழக அரசால் ஏறத்தாழ 3600 கோடி ரூபாய் அளவிற்கு வரப்பெற்ற மத்திய அரசின் மானியங்களை பயன்படுத்தாமல் திருப்பி அனுப்பி உள்ளதாக ஒரு தவறான கருத்து வெளியாகியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கையில் வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கும் போது மத்திய அரசு திட்டங்களுக்கு எந்த அளவிற்கு மத்திய அரசு நிதி எதிர்பார்க்கப்படுகிறதோ அந்த அளவிற்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதன்மூலம் இத்திட்டங்களை உடனடியாக செயல்படுத்த இயலும். இந்த ஒதுக்கீடு மத்திய அரசிடமிருந்து அந்த நிதியாண்டில் விடுவித்து வரப்பெறும் மானியங்களின் அடிப்படையில் திட்டப் பணிகளுக்கான விடுவிக்கப்படுகிறது. சில திட்டங்களுக்கான எதிர்பார்க்கப்படும் நிதி மத்திய அரசிடமிருந்து வரப்பெறவில்லை என்றால் மாநில அரசின் நிதிநிலை அறிக்கையில் அதற்காக செய்யப்படும் ஒதுக்கீட்டை அந்த ஆண்டு விடுவிக்காமல் அதை சேமிப்பாக கருதுகிறோம். தொடர்ந்து அடுத்து ஆண்டு மத்திய அரசிடமிருந்து நிதி வரப்பெறும் போது அந்தத் திட்டங்களுக்கான நிதியை மாநில அரசு ஒதுக்கீடு செய்கிறது. இதுபோன்ற இனங்களில், மாநில அரசு மத்திய அரசின் நிதியை பயன்படுத்தாமல் திருப்பிக் கொடுத்துள்ளது என்று கூறுவது ஒரு தவறான கருத்தாகும்.**

**எடுத்துக்காட்டாக, 2017–18ஆம் ஆண்டு பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட உள்ள அடிப்படை மானியத்திற்காக 1516.12 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் மத்திய அரசு அதற்கான முதல் தவணையான 758.06 கோடி ரூபாய் தான் விடுவித்தது. எனவே, மாநில அரசால் இரண்டாவது தவணையான 758.06 கோடி ரூபாய் விடுவிக்க இயலவில்லை. அந்தத் தொகை 2017–18ஆம் ஆண்டு சேமிப்பாக கருதப்படுகிறது. 2018–19ஆம் ஆண்டில்**

**மாநில அரசால் எடுக்கப்பட்டு முயற்சிகளினால் மத்திய அரசிடமிருந்து இந்த நிதியைப் பெற்று மாநில அரசு ஊராட்சிகளுக்கு விடுவித்தது.**

**அதேபோல்தான் பாரதப் பிரதமரின் ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 2017–18ஆம் ஆண்டு அதற்கு முந்தைய ஆண்டுகளில் அளிக்கப்பட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் மத்திய அரசிடமிருந்து 2017–18ஆம் ஆண்டில் பெறப்பட்ட தொகை குறைந்துவிட்ட காரணத்தினால் மாநில அரசின் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை 2017–18ஆம் ஆண்டு முறையாக விடுவிக்க இயலவில்லை. 2018–19ஆம் ஆண்டு இந்தத் தொகை விடுவிக்கப்பட்டது. எனவே, இதுபோன்ற திட்டங்களுக்கு அதே நிதியாண்டில் மத்திய அரசின் நிதி பெறப்படவில்லை என்கிற நிலையில் சேமிப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது. ஆனால் அதற்கு அடுத்த ஆண்டு மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற்றவுடன் இந்தத் தொகைகளை மாநில அரசு விடுவித்து திட்டட்ஙகளை சீரான முறையில் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, ஒருபோதும் மாநில அரசு மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட நிதியை பயன்படுத்தாமல் திருப்பி அனுப்பிய ஒருநிலை ஏற்படவில்லை என்பதை திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கிறேன்.**

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்தபொழுதும் இப்படிப்பட்ட நிகழ்வுகள் தான் ஏற்பட்டிருந்தது. அதற்கான புள்ளிவிவரங்கள் எங்களிடம் இருக்கின்றது. ஆகவே, பத்திரிகையில் செய்தி வெளிவர வேண்டுமென்பதற்காக, மத்திய அரசால் வழங்கப்பட்ட நிதியை பயன்படுத்தாமல் திருப்பி அனுப்பப்பட்டதைப் போன்ற ஒரு தோற்றத்தை அளிக்கும் விதமாக செய்திகள் வெளிவந்தது உண்மையல்ல. மத்திய அரசு அளித்த நிதி முழுவதையும் அரசு செலவழித்துக் கொண்டிருக்கின்றது. நான் குறிப்பிட்டதைப் போன்று, சில இனங்களில், அவர்கள் குறிப்பிட்ட காலத்தில் அந்த நிதி வராத காரணத்தினால் அடுத்த ஆண்டு அந்த நிதியை பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு அரங்குகள் மிகச் சிறப்பாக அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல இந்தப் பொருட்காட்சியில் கண்டுகளிப்பது மட்டுமல்ல அரசாங்கம் செயல்படுத்தும் திட்டங்களை விளக்கமாக, தெளிவாக கண் முன் நாம் பார்க்கின்றோம். இந்த அரங்கத்தை நம்முடைய மாவட்ட மக்கள் மட்டுமன்றி, அருகில் இருக்கின்ற கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல், ஈரோடு மாவட்ட மக்களும் கண்டுகளித்து மகிழ வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டு, செய்தி மக்கள் தொடர்புத் துறை அல்லும் பகலும் அயராது உழைத்து அரசின் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தி வருகின்ற காரணத்தினால் இத்துறை சார்ந்த அனைவருக்கும் என்னுடைய மனமார, உளமார நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த அரசு பொருட்காட்சி நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுவதற்கு உழைத்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அரசு உயரதிகாரிகளுக்கும், வருகை தந்துள்ள பொதுமக்களுக்கும், பயனாளிகளுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

*****